# ஏப்ரல்- 30 - திங்கள்

## புனித பத்தாம் பத்திநாதர்

“ என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதை கடைப்பிடிப்பார்……..குடிகொள்வோம்.” (யோவா.14:23)

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி14: 5 – 18

அந்நாட்களில் பிற இனத்தாரும் யூதரும் தம் தலைவர்களுடன் சோந்து திருத்தூதரை இழிவுபடுத்தி, கல்லால் எறியத் திட்டமிட்டனர். இதை அவர்கள் அறிந்து லிக்கவோனியாவிலுள்ள நகரங்களான லிஸ்திராவுக்கும் தெருபைக்கும் அவற்றின் சுற்றுப்புறங்களுக்கும் தப்பிச் சென்றார்கள்.அங்கெல்லாம் அவர்கள் நற்செய்தியை அறிவித்தார்கள்.லிஸ்திராவில் கால் வழங்காத ஒருவர் இருந்தார். பிறவிலேயே கால் ஊனமுற்றிருந்த அவர் ஒருபோதும் நடந்ததில்லை. அவர் அமர்ந்துபவுல் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவரிடம் நலம் பெறுவதற்கான நம்பிக்கை இருப்பதைக் கண்டு பவுல் அவரை உற்றுப்பார்த்துஉரத்த குரலில், ”நீர் எழுந்து காலூன்னறி நேராக நில்லும்” என்றார். அவர் துள்ளி எழுந்து நடக்கத் தொடங்கினார்.பவுல் செய்ததைக் கூட்டத்தினர் கண்டு லிக்கவோனிய மொழியில், ”தெய்வங்கள் மனித உருவில் நம்மிடம் இறங்கி வந்திருக்கின்றன” என்று குரலெழுப்பிக் கூறினர்.அவர்கள் பர்னபாவைச் ”சேயுசு” என்றும், அங்குப் பவுலே பேசியபடியால் அவரை ”எர்மசு” என்றும் அழைத்தார்கள்.நகருக்கு எதிரிலுள்ள சேயுசு கோவில் அர்ச்சகர் காளைகளையும் பூமாலைகளையும் கோவில் வாயிலுக்குக் கொண்டு வந்து கூட்டத்தினருடன் சோந்து பலியிட விரும்பினார்.இதைக் கேள்வியுற்ற திருத்தூதர் பர்னபாவும் பவுலும் தங்கள் மேலுடைகளைக் கிழித்துக்கொண்டு கூட்டத்துக்குள் பாய்ந்து சென்று உரக்கக் கூறியது”மனிதர்களே, ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப் போன்ற மனிதர்கள்தாம் நீங்கள் இந்தப் பயனற்ற பொருள்களை விட்டுவிட்டு, விண்ணையும் மண்ணையும் கடலையும் அவற்றிலுள்ள அனைத்தையும் உண்டாக்கிய வாழும் கடவுளிடம் திரும்புங்கள் என்ற நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறோம்.கடந்த காலங்களில் அவர் அனைத்து மக்களினங்களையும் அவரவர் வழிகளில் நடக்கும்படி விட்டியிருந்தார்என்றாலும் அவர் தம்மைப் பற்றிய சான்று எதுவும் இல்லாதவாறு விட்டுவிடவில்லை. ஏனெனில் அவர் நன்மைகள் பல செய்கிறார் வானிலிருந்து உங்களுக்கு மழையைக் கொடுக்கிறார் வளமிக்க பருவ காலங்களைத் தருகிறார் நிறைவாக உணவளித்து உங்கள் உள்ளங்களை மகிழ்ச்சி பொங்கச் செய்கிறார்.”இவற்றை அவர்கள் சொன்னபின்பு கூட்டத்தினர் தங்களுக்குப் பலியிடுவதை ஒருவாறு தடுக்க முடிந்தது.

**பதில்பாடல் :** எங்களுக்கன்று ஆண்டவரே மாட்சிமை உம்பெயருக்கே உரித்தாகுக.

## நற்செய்தி : யோவான்14 : 21 – 26

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:,என் கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிப்பவர் என்மீது அன்பு கொண்டுள்ளார். என்மீது அன்பு கொள்பவர்மீது தந்தையும் அன்பு கொள்வார். நானும் அவர் மீது அன்பு கொண்டு அவருக்கு என்னை வெளிப்படுத்துவேன்.”யூதா - இஸ்காரியோத்து யூதாசு அல்ல, மற்றவர் - அவரிடம், ”ஆண்டவரே, நீர் உம்மை உலகிற்கு வெளிப்படுத்தாமல் எங்களுக்கு வெளிப்படுத்தப் போவதாகச் சொல்கிறீரே, ஏன்?” என்று கேட்டார்.அதற்கு இயேசு பின்வருமாறு கூறினார் ”என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம்.என்மீது அன்பு கொண்டிராதவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பதில்லை. நீங்கள் கேட்கும் வார்த்தைகள் என்னுடையவை அல்ல் அவை என்னை அனுப்பிய தந்தையுடையவை.உங்களோடு இருக்கும்போதே இவற்றையெல்லாம் உங்களிடம் சொல்லி விட்டேன்.என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார் நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்.அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன் என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம் மருள வேண்டாம்“ என்றார்.

**தியானம் :** இன்றைய வாசகங்கள் இறைவன்மீது அன்புகொண்டு என்றும் அவரில் நிலைகொண்ட மக்களாக வாழ எமக்கு அழைப்பு விடுக்கின்றன. இவ்வுலகில் அன்பு பலவழிகளில் வெளிப்படுவதை நாம் பார்க்கின்றோம். முதன்முதலாக தந்தையாகிய கடவுள் தம் ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்பி மனித மீட்பிற்காக அவரைச் சிலுவைச்சாவிற்கு கையளித்ததன் வழியாக தமது அன்பை வெளிப்படுத்தினார். இயேசு கடவுளாக இருந்தும் தம்மை கையளித்ததின் வழியாக தமது அன்பைக் காட்டினார். என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பர் என் தந்தையும் அவா் மீது அன்பு கொள்வார். நாங்கள் அவர்களில் குடிகொள்வோம். (யோவா.14:23) முதல் வாசகத்தில் இவ்வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதைப் பார்க்கின்றோம். புனித பவுலின் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்வுகளை உற்றுப் பார்க்கும் பொழுது இது தெளிவாகின்றது. பிற இனத்தாரும், யூதரும் திருத்தூதரைக் கொல்லத் திட்டமிட்டபோது அவர்களைக் கடவுள் காப்பாற்றுகிறதைப் பார்க்கின்றோம். தொடர்ந்து அவர்கள் கடவுளின் கட்டளைகளை ஏற்று நற்செய்தியை தாங்கள் சென்ற இடமெல்லாம் பரப்பி வந்தார்கள். நம்மையும் பாதுகாத்து, பராமரித்து வழிநடத்திவரும் இறைவனை அன்பு செய்ய வேண்டுமென்றால் அவரது கட்டளைகளை கடைப்பிடிக்க வேண்டும். இயேசுவின் கட்டளைகளைக் கடைப்பிக்கும் பொழுது இறை விருப்பத்தை நாம் நிறைவேற்றுகின்றோம். அப்போது கடவுள் நம்முள் குடி கொண்டுள்ளார். என்பது தெளிவாகும்.